பிஸ்மில்லாகி.

மெய்ஞ்ஞான சொரூபராகிய தக்கலை

பீருமுகம்மதுசாகிபு அவர்கள்

இயற்றிய

ஞானரத்தினக்குறவஞ்சி.

வாணீவிலாச அச்சுக்கூடத்திற்

பதிப்பிக்கப்பட்டது.

1923

நெ. 11 தாண்டவராயப்பிள்ளை வீதி, சென்னை.

பிஸ்மில்லாஹிற்றகுமானிற்றகீம்

ஞானரத்தினக்குறவஞ்சி.

———(*)———

காப்பு

பொன்னுலகு பொருந்துமனைப் பொருளறியத்தனமதிய, மின்னுலகில மெய்ஞ்ஞானம் விளங்க குறவஞ்சிதனை, உன்னுமத்தன்னினைவி லுன்னியுதிப் பொருளான்காய்த், தன்னிறையத்தன்னினைவாய்த் தரிப்பதுவேகாப்பாமே,

ஆதிக்குமுன்னமனாதியுமென்னடி சிங்கி-அது
அந்தக்கருக்குழியிந்தவிருளறைசிங்கா
ஆதியாவந்தலரும்பொருளேதடி சிங்கி-அது
சோதியிலாதிசொரூபமாயெழுந்ததுசிங்கா
சோதியிலாதிசொரூபமானதெப்படிசிங்கி-அது
வேதமாய்முப்பொருளொன்றாய்மூடிந்ததுசிங்கா
முப்பொருளென்றநீமுன்சொன்னதாரடிசிங்கி-அது
அப்பனுமாயிபாதையால்காமடாசிங்கா
எப்படியுலகத்திலிப்படியுருவொணும்சிங்கி-அது
அப்பன்வீட்டுக்குவொப்பியதாயாலேசிங்கா
பாரபாத்தினிற்பஞ்சவன்னமேதுசிங்கி-அது

வேராகுத்தூராவிந்துவிறமடாசிங்கா
ஒன்றுக்குளேவர்களுடானதெப்படி சிங்கி-அது
ஒன்றோடேயொன்றாகவோடிபிணைந்ததுசிங்கா
மூலக்குகைக்குள்ளேமூச்சடரேதடிசிங்கி-அது
நாதத்திலம்பூகமன்பாயுகிந்ததுசிங்கா
மூலக்கைகயெனுங்கோட்டைக்காசரியார்சிங்கி-அது
முப்பொருளொன்றாய்முடிந்தனேவடாசிங்கா
மூலக்கிழங்குமுளைத்திடபெவ்விடஞ்சிங்கி
நாதத்திலானநடுவிலல்லவோசிங்கா
முன்னேமுளையாம்முளைத்திடபெவ்விடம்சிங்கி-அது
மூளைமுனையுருகண்ணிகளல்லவோசிங்கா
பின்னேயுருவாய்முடிந்திடபெவ்விடப்சிங்கி-அது
பெண்ணுணுமாகப்பிறந்ததலமடாசிங்கா
இந்தவுடலுக்குவேரென்னதுசொன்னசிங்கி-அது
இந்தவு-லுக்குராதிமூலமேசிங்கா
இந்தவுடலுக்குயிர்வந்ததெப்படிசிங்கி-அது
தொந்திநடுக்குழிதொப்பூழ்வழியடாசிங்கா
இந்தஉடலுக்குயிரெங்கேநின்றதுசிங்கி-அது
அந்தரமாயண்டமாககொடிநின்றதுசிங்கா
இந்தவுடற்கனியெந்தக்கொடிபகவிசிங்கி-அது
முந்தியதொப்பூழுடமாகக்கொடியல்லேலாசிங்கா

மாகநோடியென்பனதமானிடரேன்சொன்னார்சிங்கி
மட்டிலடங்காதமாகலிமாசிங்கா
எந்தவழியினால்வந்தோமுலகினில்சிங்கி-அது
வெல்லாமுடிந்தபொருள்வழிபடாசிங்கா
முன்னேயறிவாலறிவகையென்னடி சிங்கி-அது
மூச்சுடர்மூன்றுமுடனுமிராததுமாகசிங்கா
பின்னேநிவர்களொன்றானதெப்படி சிங்கி-அது
பேதகமற்றபெருவெளியானதுசிங்கா
ஆசைதொண்டுகம்மைவாட்டுறதாரடி சிங்கி-அது
அக்கினிவாயுநீர்மண்ணின்மகிமையேசிங்கா
ஆசைபாசாலனுபோகமாரடி சிங்கி-அது
அங்கம்பொருந்தியபங்குநண்ணல்லவோசிங்கா
தன்னையறியுந்தலவேதுசொல்லடி சிங்கி-அது
கண்ணிடையானநிநிலையல்லவோசிங்கா
என்னவிதமாகத்தன்னையறிவதுசிங்கி-அது
தன்னவன்றாய்த்தந்தைபாகிநாமானதுசிங்கா
இறையையறிவதுஎப்படிச்சொல்லடி சிங்கி-அது
இறையெங்குநின்றிடுந்தன்நினைவாகுமோசிங்கா
தன்னுள்விளங்குந்தவமென்னசொல்லடிசிங்கி நீ
தன்னைமறந்துதவத்திலிருப்பதுசிங்கா

என்னவிதமாகத்தன்னைமறப்பதுசிங்கி-நீ
யொன்றைப்பொருந்தியொடுங்கியிருப்பதுசிங்கா
என்னவிதமாகவொன்றைப்பொருந்தலாயசிங்கியது
எல்லாமறந்துயிருளாயிருப்பதுசிங்கா
ஒன்றென்றுசொன்னவுயிர்நிலையென்னடிசிங்கி-அது
உன்னுளுதிப்பலமுன்னால்நினைவடாசிங்கா
கன்னியெழுந்துகலந்திடவெவ்விடஞ்சிங்கி-அது.
முன்னியெழுந்தவுயிர்நிலையல்லவோசிங்கா
எங்கும்பரந்தபெருப்பொருளென்னடிசிங்கி-அது
அங்கிங்கெங்குங்கண்டபெருவெளிசிங்கா
அண்ணிணுமெண்ணுமழியாப்பொருளென்னசிங்கி-நீ
கண்ணையுமூடவிருளழியாப்பொருள்சிங்கா
ஆங்காரவுடலுக்குஆணியென்னடியசிங்கி-அது
ஓங்காரமூலத்திலுள்ளொளியல்லவோசிங்கா
ஆணியாய்வந்தவருமபொருளென்னடிசிங்கி-முன்
தோணியசன்குருமுதனுமல்லவோசிங்கா
இந்தப்பொருள்வந்ததெந்தவழியடிசிங்கி-அது
அந்தக்கதிர்மதிவந்தவழியடாசிங்கா
கத்தனொளிவுலகலந்திடவெவ்விடப்சிங்கி-வழி
யத்தநடனந்தானுபடியதறபாஞ்சிங்கா
உத்தபொருளுக்குயிரெழுத்தென்னடிசிங்கி-அது

நச்சரவாடுநடுநிலையல்லவோசிங்கா
எட்டெழுத்தாகவெழுத்தெழுத்தென்னடிசிங்கி-அது
மட்டிலடங்காவடிவட்டகோணமேசிங்கா
அஞ்செழுத்தாகசமைந்தெழுத்தென்னடிசிங்கி-அது
அஞ்சம்பொருந்தியஆகாயவட்டமேசிங்கா
அன்பத்தோரடசரமறியநீசொல்லடிசிங்கி-அது
வஞ்சமகாரநடுச்சுழிமூன்றுமேசிங்கா
கற்பகவாசிகலந்திடமெவ்விடஞ்சிங்கி-அது
உற்பனமூலத்தினுள்ளொளிவல்லவோசிங்கா
சத்தம்பிறந்திடுஞ்சற்குருவேதடிசிங்கி-அது
உற்றசுவாசமுயிர்நிலையல்லவோசிங்கா
கண்டுதொழுஞ்சிவகாரணமேதடிசிங்கி-நம்மை
யுண்டுபடுத்தியவுள்ளொளிவானதேசிங்கா
எப்படிகண்டுபிறையைவணங்கலாம்சிங்கி-அது
நட்புடன்ரெண்டுநடுநிலைகாண்பதுசிங்கா
நடுநிலையானதைநாடுறதெப்படிசிங்கி-அது
நாட்டந்தேட்டமோட்டமாட்டமொன்றாகினுசிங்கா
தேட்டமுநாலுந்திருந்துவதெப்படிசிங்கி-அது
திருவைப்பொருந்திபொருமித்தேசிங்கா
ஒருமித்திருக்கின்றவோசிடமெவ்விடம்சிங்கி-அது
வொன்றுமிரவும்பகலுமுதிப்பிடம்சிங்கா

இரவும்பகலுமொன்றானதுமெவ்விடஞ்சிங்கி-அது
எப்போதுமிருளாயிருப்பதுமூலையேசிங்கா
சரடம்பகலும்பிறப்பிடமெவ்விடம்சிங்கி-அது
இருளினுதித்துன்னிவந்ததடிமூலம்சிங்கா
இரவும்பகலுமெழுந்திடமெவ்விடம்சிங்கி-அது
யேகாந்தவுன்னவந்தேறியதாமறைசிங்கா
இரவும்பகலும்பிரிந்திடமெவ்விடம்சிங்கி-அது
யெழுந்தருகோணமிடம்வலமாகியேசிங்கா
இரவும்பகலுமநின்றாடியதெவ்விடம்சிங்கி-அது
யெழுந்துகன்றிஞ்சுழிமூனைமண்டலம்சிங்கா
இரவும்பகலுமிருப்பிடமெவ்விடம்சிங்கி-அது
யீராறும்மோடியவோறுனைநான்கடாசிங்கா
இரவும்பகலுமுதிப்பிடமெவ்விடம்சிங்கி-அது
மேனமெட்டங்கமலமிருவிழிநடுநிலைசிங்கா
இரவும்பகலென்றென்னத்தைச்சொல்லலாம்சிங்கி
இரவுபகலில்பிங்கலைவாசியேசிங்கா
இடகலைபின்கலையென்னத்தைச்சொல்லலாம்சிங்கி
இடகலைசந்திரன்பின்கலைசூரியன்சிங்கா
என்னத்தைச்சொல்லலாம்சந்திரன்சூரியன்சிங்கி-அது
இடவலமாகவெழுத்தோடுமூச்சடாசிங்கா
சந்திரன்சூரியனொன்றுன்தெவ்விடம்சிங்கி-அது
கலையும்பொருந்துநடுச்சுழிமுனையேசிங்கா

என்னத்திலேபாலமேறிநின்றுதுசிங்கி- அது
உள்ளுக்குள்வாசிநடைப்புரவிமேற்சிங்கா
என்னவிதமாகவெடுத்துநின்றுடலாம்சிங்கி- அது
ஏற்றவுமாற்றவுமிணங்கிநின்றுடிபார்சிங்கா
மாற்றிப்பிறக்கமருந்தென்னசொல்லடிசிங்கி- அடி
மாளாமல்மாண்டுமறந்துஇருப்பதேசிங்கா
அட்டகஜங்களறிந்திடவெவ்விடம்சிங்கி- அது
எட்டுவிதமாவெழுதும்பலனடாசிங்கா
உற்றஞானப்பொருளுத்தியாய்ச்சொன்னதார்சிங்கி
உற்றபீர்முகம்மதுவுரைத்ததுசிங்கா

ஞானரத்தினக்குறவஞ்சி முற்றிற்று.

பக்கீர்முகியித்தீன்புலவர்பாடிய

ஆசிரியவிருத்தம்:

வள்ளலிறசூலுரைத்தவழிமுறைபோல்
தீனோர்கள்மகிழ்ந்திடேற
வெள்ளவில்லாவிழியாங்கினியில்பாலான
சரியத்தென்னுமுற்றேருங்குந்
தெள்ளமுதத்தரிக்கத்தக்கிகத்து
மகுரியத்துத்தெளிவாய்நான்கு
முள்ளடக்கிக்குறவஞ்சியெனவுரைத்தார்
பீர்முகம்மதென்னுங்கொண்டல்.